# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.28/2024** **நாள் : 11.03.2024**

**ரூ.78.58 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு – 200, செம்மஞ்சேரி பகுதிக்கான ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் செம்மஞ்சேரி பகுதியில் கழிவுநீர்க் குழாய் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.78.58 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு – 200, செம்மஞ்சேரி பகுதிக்கான ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் செம்மஞ்சேரி பகுதியில் கழிவுநீர்க் குழாய் பதிக்கும் பணிகள் மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களால் 08.03.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், செம்மஞ்சேரி பகுதிகளில் 21.20 கி.மீ நீளத்திற்கு 250 மி.மீ முதல் 400 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் குழாய்கள் மற்றும் 9.72 கி.மீ. நீளத்திற்கு 150 மி.மீ முதல் 500 மி.மீ. விட்டமுடைய கழிவுநீர் விசைக் குழாய்கள் பதிக்கும் பணிகள் 09.03.2024 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 827 எண்ணிக்கையிலான இயந்திர நுழைவாயில்கள், 2 கழிவுநீரிறைக்கும் நிலையங்கள், 5 கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 4.85 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சோழிங்கநல்லூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிக்கப்படும். இதன்மூலம், 51,114 பொதுமக்கள் பயன் பெறுவர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater